இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 99 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 03 – புதன்கிழமை 19 நவம்பர் 2025 – மதுரை 12 + 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 99: Thiruvalluvar Year - 2056 - Karthigai 03 - Wednesday 19 November 2025 - Madurai 12+10 Pages ₹ 5.00

## விவசாயிகளின் நலன் கருதி – நெல் கொள்முதலுக்கான

# ஈரப்பத அளவை 22 சதவிகிதமாக உயர்த்தி வழங்குக!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், வால்பாறை, கிணத்துக்கடவு மற்றும் சூலூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

## கோவை வருகை தரும் பிரதமருக்கு உழவர்களின் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை!

**சென்னை, நவ. 19 -**

**தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், தமிழ்நாட்டில்நெல்விவசாயிகளின் அவசர மற்றும் முக்கியமான தேவைகள் தொடர்பாக வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (17.11.2025) கடிதம் எழுதியுள்ளார்.

**சாதனை படைத்த குறுவை பருவ நெல் உற்பத்தி**

தமிழ்நாட்டில், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில், இந்த ஆண்டு கரீஃப் (குறுவை) பருவத்தில் மிக அதிக அளவு நெல் உற்பத்தி எய்தப்பட்டுள்ளது. 16.11.2025 நிலவரப்படி, நெல் கொள்முதல் கடந்த 2024-2025ஆம் ஆண்டினுடைய 4.81 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து நடப்பாண்டில் 14.11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்றும், இது தமிழ்நாட்டின் வரலாற்றில் குறுவை (கரீஃப்) பருவத்தில் நெல் கொள்முதலில் புதிய சாதனையாகும் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 16.11.2025 நிலவரப்படி 1,932 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, 1,86,674 விவசாயிகளிடமிருந்து 14.11 லட்சம் மெட்ரிக் டன் நெல்லை ரூ.3,559 கோடி வழங்கி கொள்முதல் செய்துள்ளது. ஒப்பீட்டளவில், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் (16.11.2024 வரை), 1,095 நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் 4.83 லட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.

தற்போதைய நெல் கொள்முதல் பருவத்தில் (31.08.2026 வரை) விற்பனைக்குரிய சந்தை உபரி நெல் 98.25 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி அடிப்படையில் இது 66.81 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். இது தொடர்பாக, 8.8.2025 அன்று, Kharif Marketing Season (KMS) 2025-2026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 20 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்குமாறு ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு முன்மொழிவு பரிந்துரைக்கப்பட்டது.

தற்போது ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத் துறை, KMS 20252026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 31.3.2026 வரை 16 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயித்துள்ளது. நெல் சாகுபடியில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் சாதனை அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, KMS 2025-2026க்கான 16 லட்சம் மெட்ரிக் டன் அரிசி இலக்கை, கரீஃப் பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவிற்கேற்ப உயர்த்தி திருத்தம் செய்திட தமிழ்நாடு அரசுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இரண்டாவதாக, காவிரி டெல்டா பகுதி மற்றும் பிற மாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக நிர்ணயிக்குமாறு தமிழ்நாடு அரசால் 19.10.2025 அன்று ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

### சி.பி.ஐ.யின் வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள்!

## சி.பி.ஐ. அமைப்பு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது!

### உச்சநீதிமன்றம் கடுமையான விமர்சனம்!

புதுடெல்லி, நவ. 19 -

சி.பி.ஐ அமைப்பு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும், சி.பி.ஐ தனது தனித்தன்மையை இழந்து நிற்பதாகவும், உச்ச நீதிமன்றம் கடுமையாக விமர்சித்துள்ளது.



இமாச்சலப் பிரதேசத்தில் நிகழ்ந்த தற்கொலை வழக்கு குறித்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அசானுதீன் அமானுல்லா, பிரஷாந்த் குமார் மிஸ்ரா ஆகியோரடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, தற்கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்த முறை குறித்து கடுமையாக விமர்சனங்களை தெரிவித்த நீதிபதிகள், குற்றம் சுமத்தப்பட்டவர் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்ற சி.பி.ஐ வாதத்தை ஏற்க மறுத்தனர்.

இந்த வழக்கில் சிபிஐ தோல்வி அடைந்தது வெளிப்படையாகத் தெரிவதாகவும், சாதாரண போலீஸ் அதிகாரி கூட இதைவிடச் சிறப்பாக விசாரணை நடத்தியிருப்பார் என்றும் கூறிய நீதிபதிகள், சிபிஐ அதிகாரிகள் எவ்வளவு தகுதியற்றவர்கள் என்பதை நீதிமன்ற உத்தரவில் பதிவிடுவோம் என்றும் எச்சரித்தனர். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி முற்றிலும் தகுதியற்றவர்.

அவருக்கு மீண்டும் பணிகள் ஒதுக்கக் கூடாது என்றும் நீதிபதிகள் கடுமையாக தெரிவித்தனர். சிலருக்கு பிடித்தமான முறையில் விசாரணை நடத்துவது, அரசியல் செய்வது மிகுந்த அவமானம் என்றும் தெரிவித்த நீதிபதிகள், இது போன்ற அதிகாரிகளால் சி.பி.ஐ இவ்வளவு கீழ்நிலைக்கு வந்துவிட்டதாகவும், சி.பி.ஐ அமைப்பை யாரும் இப்போது நம்புவதில்லை என்றும் நீதிபதிகள் கடுமையான விமர்சித்தனர்.

முன்பு சி. பி.ஐ எப்படி பணியாற்றியது என்பது தங்களுக்கு தெரியும் என்றும் தற்போது அனைத்து விசாரணை அமைப்புகளும் சிதைந்துவிட்டன, எதுவும் சுதந்திரமாக செயல்படவில்லை, இது மிகவும் வருந்தத்தக்கது என்றும் நீதிபதிகள் கூறினார்.

பின்னர் குற்றவாளி கைது செய்யப்பட்டாலோ, சரணடைந்தாலோ அவருக்கு ஜாமின் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஒத்திவைத்தனர்.

### தி.மு.க.வினர் மீது அ.தி.மு.க. விமர்சனம் வைப்பது இயலாமையின் வெளிப்பாடு!

# முறையற்ற முறையில் வாக்காளர் பட்டியல் தயாரித்தால் உச்சநீதிமன்றத்தை நாடுவோம்!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி!

**சென்னை, நவ. 19 -**

**பா.ஜ.க.வுக்குச் சாமரம் வீசு வதற்காகவே SIRஐ அ.தி.மு.க. ஆதரித்தது. தி.மு.க.வினர் மீது அ.தி.மு.க. விமர்சனம் வைப்பது இயலாமையின் வெளிப்பாடு என்றும், தி.மு.க. எப்போதும் நேர்மையான வாக்காளர் பட்டியல் வேண்டும் என்று வலியுறுத்துகிறது; 2026ல் முறையற்ற முறையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டால், நிச்சயமாக உச்சநீதி மன்றத்தை நாடுவோம் என்று தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.**

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளரும் மூத்த வழக்கறிஞருமான என்.ஆர். இளங்கோ எம்.பி. சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்து அளித்த பேட்டி வருமாறு:-

தி.மு.க.வின் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ அவர்கள் நேற்று அளித்த செய்தியாளர் சந்திப்பில், தேர்தல் ஆணையம் தற்போது மேற்கொண்டு வரும் சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியதுடன், எதிர்க் கட்சிகளின் விமர்ச னங்களுக்கும் பதிலளித்தார்.

**எடப்பாடியின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது!**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்வைத்த குற்றச்சாட்டான, தி.மு.க.வின் பி.எல்.ஏ.2க்கள் மட்டும்தான் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு மட்டும்தான் கணக்கீட்டுப் படிவம் கொடுக்கப்படுகிறது என்பது உண்மைக்கு புறம்பான செய்தி என்று இளங்கோ திட்டவட்டமாக மறுத்தார். பி.எல்.ஏ.2க்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் மட்டுமே நியமிக்கப்பட முடியும். நியமனம் செய்யப்பட்ட பி.எல்.ஏ.2க்களுடைய பட்டியலைத் தேர்தல்



ஆணையம் தன்னுடைய இணையதளத்தில் வெளியிடும். இந்த பி.எல்.ஏ. 2க்கள் மட்டும்தான் பி.எல். ஓ.க்களுடன் இணைந்து பணியாற்றக்கூடிய தகுதி பெற்றவர்கள். எஸ்.ஐ.ஆரை பொறுத்தவரை, ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினுடைய பி.எல்.ஏ.2 ஒரு நாளைக்கு 50 கணக்கீட்டுப் படிவங்கள் வரை பூர்த்தி செய்து கொடுக்கலாம் என்று தேர்தல் ஆணையம் 27.10.2025 அன்றே உத்தரவில் சொல்லியிருக்கிறது.

மேலும், அ.தி.மு.க.வினர், எஸ்.ஐ.ஆர்.ஐ வரவேற்றுப் பேசியது, அதில் உள்ள பிரச்சினைகளை அறிந்து கொள்ளாமல், பா.ஜ.க. வுக்கு சாமரம் வீச வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே என்றும் அவர் விமர்சித்தார். எஸ்.ஐ.ஆர். நிறைவேற்றத் தொடங்கிய பிறகே, பொதுமக்களுடைய வாக்குகளைப் பறிக்கக்கூடிய வகையில் இது இருப்பதை அ.தி.மு.க. தொண்டர்கள் உணர்ந்து, தங்கள் கட்சி எடுத்த நிலை தவறு என்று அறிந்திருக்கிறார்கள். அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவரே, தன்னுடைய கணக்கீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்து தருவதற்கு, தி.மு.க.வின் பி.எல்.ஏ.க்கள் தான் உதவி செய்தார்கள் என்பதை வெளிப்படையாக தன்னுடைய இணையதளப் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார்.

**2004ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. வலியுறுத்துகிறது!**

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், தி.மு.க. ஏன் வாக்காளர் பட்டியல் சரி செய்ய வேண்டும் என்பதை இத்தனை நாட்களாக சொல்லவில்லை, அவர்களுக்கு வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இருந்து கொண்டே இருக்க வேண்டுமா? என்று கருத்தைப் பதிவிட்டிருந்தார்.

அதற்கு பதிலளித்த இளங்கோ, கலைஞர் அவர்கள் 15.02.2004 அன்றே, வாக்காளர் பட்டியலை சரி செய்ய வேண்டும் என்று தன் கைப்பட கடிதம் எழுதி இருக்கிறார். 2004 முதல் 2024 வரை, ஒவ்வொரு தேர்தலின் போதும், வாக்காளர் பட்டியலை முறைப்படுத்த வேண்டும்

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

### ராஜஸ்தானில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்

## S.I.R.- பணிச்சுமை காரணமாக தற்கொலை!

### பி.எல்.ஓ. மரணத்திற்கு நீதி கோரி ஆசிரியர்கள் போராட்டம்!

ஜெய்ப்பூர், நவ, 19 -

கேரளாவைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்திலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தற்கொலை. செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்னர் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் எஸ்ஐஆர் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பணியில் ஆசிரியர்கள் உள்பட அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்த முகேஷ் ஜன்கித். ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். இறப்பதற்கு முன்பாக அவர் எழுதி வைத்திருந்த கடிதத்தை முகேஷின் சகோதரர் வெளியிட்டுள்ளார்.

அதில், வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியில் ஈடுபட்டுள்ள தமக்கு மேலதிகாரிகள் அழுத்தம் கொடுப்பதாகவும், பணி நீக்கம் செய்துவிடுவதாக மிரட்டுவதாகவும் எழுதப்பட்டிருந்தது.

இதற்கிடையே, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அளிக்கப்படும் பணிச் சுமையைக் கண்டித்தும், முகேஷ் ஜன்கித்தின் மரணத்திற்கு நீதி கோரியும் ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் ராஜஸ்தானின் பல பகுதிகளிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கேரளாவை தொடர்ந்து ராஜஸ்தானிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் தற்கொலை. செய்து கொண்ட சம்பவம் அம்மாநில மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.